2021 பிப்ரவரி 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ரூ.2,500/–கூடிய பொங்கல் பரிசு என்று சொன்னேன். அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் என்று மாற்றிக் கொள்ளவும். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது திருத்திக்கொள்ளப்படும்.*

3. கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பதைக் கொடுப்பது, வேண்டுகோள் வைப்பதைத் தருவது என்பது சராசரி அரசினுடைய, ஒரு முதலமைச்சரினுடைய கடமையாக நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், கேட்காமலேயே, எவரும் கேட்காமலேயே (மேசையைத் தட்டும் ஒலி) விண்ணப்பங்கள் வராமலேயே, மக்களின் ஆழ்மனதில் இருக்கின்ற சங்கடங்களைப் புரிந்துகொண்டு, நாட்டு மக்களுடைய மகிழ்ச்சியே தன்னுடைய ஒரே இலட்சியம் என, (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை தலைமையேற்று, சிறப்பான பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்கள், விவசாயிகளுடைய நலனை பாதுகாப்பதே தன்னுடைய இலட்சியம் என்று, விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான், நாட்டு மக்கள் சோற்றிலே கை வைக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டிருக்கின்ற, ஒரு விவசாயியாக இருக்கின்ற விவசாய முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 2,500/– பொங்கல் பரிசு கொடுத்ததோடு, பயிர்க் கடன் 12,110/– கோடி ரூபாயை, தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை எவரும் செய்யாத, உச்சபட்ச நிதி தள்ளுபடியை கொடுத்து, ஆணையிட்டு, நிதியையும் கொடுத்து, அப்போதே அமலாக்கிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது கூட்டுறவுச் சங்கத்தில், நகைக் கடன், விவசாய நகைக் கடன் முழுவதையும் இரத்து செய்திருக்கின்றார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரை அடகுவைத்து கடன் வாங்கியிருக்கின்ற அந்த விவசாயிகளினுடைய நகைக் கடன்களை இரத்து செய்வதற்கு, தள்ளுபடி செய்வதற்கு,*

[திரு. ஓ.எஸ். மணியன்] [2021 பிப்ரவரி 26

அதற்கான நிதியை அரசே ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு நகையை வழங்குவதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 6 பவுன் வரை கூட்டுறவுச் சங்கங்களில் அடகு வைத்து பெற்ற நகைக் கடன்களை ஏழைக் குடும்பங்களுக்கு தள்ளுபடி செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இந்த 12,110 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உங்களுடைய கடன் அரசால் வரவு வைக்கப்பட்டுவிட்டது என்கிற சான்றிதழையும் வழங்க ஆணையிட்டு இப்போது விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் சுய உதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனையும் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பிலும், சுய உதவிக் குழு பெண்களின் சார்பிலும் என்னுடைய நன்றியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாமானியருக்குதான் ஒரு சாமானியருடைய கஷ்டம் தெரியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு சாமானிய முதலமைச்சர் இன்று அனைத்துத் தரப்பு மக்களும் பயன் பெறுகின்ற வகையில், கொரோனா என்ற கொடிய வைரஸின் காரணமாக ஓராண்டுக் காலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நிவாரணங்களை அளித்திருக்கிறார். இன்றையதினம் விதி 110–ன்கீழ் அறிவிப்பு எப்போது வரும் என்று மக்கள் ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர், விவசாயிகளினுடைய விடிவெள்ளி அவர்களின் அறிவிப்பான கூட்டுறவு வங்கியில் வாங்கியிருக்கின்ற 6 பவுன் வரை நகைக் கடன் தள்ளுபடி என்பது, அனைத்து ஏழைக் குடும்பங்களின் வயிற்றிலும் பால் வார்த்த ஒரு சாமானிய முதலமைச்சர் என்ற பெயரை

வாங்கித் தந்ததோடு மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குடும்பங்களுடைய வாழ்த்துகள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீடூழி வாழ்கின்ற வகையில், அவர்களுடைய அறிவிப்பு, சிறப்பான அறிவிப்பாக இருக்கின்றது.

அதேபோல், மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் வங்கியில் கடன்பெற்று பல்வேறு தொழில்களைச் செய்து வருகிறார்கள். அப்படி தொழில்களைச் செய்கின்றபோது அதில் வருகின்ற இலாபத்தை வைத்து அந்தக் கடனை அடைத்து வந்தார்கள். ஆனால், இந்த ஓராண்டுக் காலமாக, கொரோனா தொற்று ஏற்பட்டு நிதி நெருக்கடி ஏற்பட்ட காரணத்தினால், அவர்களால் அந்தத் தொழில்களைச் சிறப்பாகச் செய்ய முடியவில்லை. அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்திருப்பது என்பது வரலாற்றில் ஒரு நிகழ்வு என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏனென்றுசொன்னால், எதையுமே எதிர்பார்க்காமல், ஒரு சாமானிய முதலமைச்சர் இந்த நாட்டை எப்படி ஆள்வார், ஒரு மாத காலம், இரண்டு மாத காலம், ஓராண்டுக் காலம் ஆள்வாரா என்று கேட்டவர்களுக்கு மத்தியில், மீண்டும் 2021 ஆம் ஆண்டு மாண்புமிகு எடப்பாடியார் அவர்களே முதலமைச்சராக வர வேண்டும் என்பதற்கு அடித்தளமாக விளங்குகின்ற வகையில், வெளியிடப்பட்டுள்ள இந்த இரண்டு அறிவிப்புகள்மூலம் இந்திய வரலாற்றில் தமிழகத்தில் ஒரு பெரிய வரலாற்று நிகழ்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிகழ்த்தி இருக்கின்றார்கள். இதெல்லாம் தெரிந்தோ என்னமோ தெரியவில்லை, எதிர்க்கட்சியினர் 'இதையெல்லாம் பார்த்துக்கொண்டு நாம் இங்கே இருக்க முடியாது, ஆதலால் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி வெளிநடப்பு செய்திட வேண்டும்' என்று சபையைப் புறக்கணித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு அறிவிப்புகளின் காரணமாக, முழுமையாக தி.மு.க.–வை மக்கள் புறக்கணித்து, 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் வென்று தமிழகத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் சிறப்பான ஆட்சி அமைவதற்கு, இது ஒரு நல்ல அடித்தளமாக இருக்கின்றது என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. பி. தங்கமணி] [2021 பிப்ரவரி 26

அவர்களின் இத்தகைய அறிவிப்புகள் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று காலையில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இன்று நிகழ்ந்த ஒரு நிகழ்வு என்பது, அதுவும் ஒரு வரலாற்று நிகழ்வு. மேட்டூரின் உபரி நீரை குளங்களுக்கு நிரப்புகின்ற அந்த நிகழ்வு. காலை 7 மணிக்குச் சென்று, அணையைத் திறந்து வைத்துவிட்டு, இங்கு வந்து, ஏழை மக்கள் அனைவரும் பயன்பெறுகின்ற வகையில் ஒரு நல்ல அறிவிப்பைச் செய்திருக்கின்றார்கள். சுழன்று பணியாற்றக்கூடிய நமது தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு, தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவே தமிழகத்தைத் திரும்பிப் பார்க்கின்ற வகையில் ஒரு நல்ல அறிவிப்பாக இருக்கின்றது. அதற்காக அனைத்து அமைச்சர்கள் சார்பிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும், அதேபோன்று தமிழக மக்களின் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டி, அவர் நீடூழி வாழ வேண்டும் என்று அன்போடு வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேளாண்மை தமிழ்நாட்டு மக்களுக்கு உயிர்நாடியாகவும், 40 சதவிகித மக்களுக்கு வாழ்வாதாரமாகவும் விளங்குகிறது. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழும் வேளாண் தொழிலை மேம்படுத்தி, தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் ஒரு பக்கம்; மழை, வெள்ளம், புயல், வறட்சி என விவசாயிகள் பாதிக்கையில் 12 ஆயிரத்து 110 கோடி ரூபாயை, வங்கியில் பெற்ற பயிர்க் கடனை இரத்து செய்தது; இன்றைக்கு நகைக் கடன் இரத்து; சுய உதவிக் குழுக்கள் மகளிர் பெற்ற கடன் இரத்து. கல்லணையை கரிகாலன் கட்டினான் என்பது வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருப்பதைபோல, வேளாண் பெருக, வேளாண்மையை நம்பியிருக்கும் விவசாயிகள் வாழ்வில் படும் துயரை நீக்கி வளம் பெற, மக்கள் மனம் குளிர, துயர் துடைப்பு நடவடிக்கைகள் பார் பாராட்ட அறிவித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்று வரலாறு பேசும். ஏரோட்டும் உழவனுக்கு நீரோட்டம் காத்தவர், உழவனுக்கு உயிரோட்டம் மீட்டவர், வாடிய பயிர்களின் வாட்டம் போக்கிய

2021 பிப்ரவரி 26] [பேரவைத் தலைவர்]

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் வேளாண்மை காத்திட்ட பேராண்மை, வெள்ளாண்மை காத்திடும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு இரண்டு முத்தான அறிவிப்புகளை—நகைக் கடன் இரத்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடன் அத்தனையும் இரத்து—ஆக, இந்த இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகள், விதி 110–ன்கீழ் அறிவிப்புமூலம் (மேசையைத் தட்டும் ஒலி) *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உயிர் நாடியை காத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளை என்னுடைய சார்பாகவும், இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் மனம் குளிர அவர்கள் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன். நன்றி, வணக்கம்.* (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிவிப்புகள்

(அ) காகிதமில்லா சட்டமன்றம் என்னும் இலக்கினை எய்திடும் நடவடிக்கையின் தொடர்ச்சியாக குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள்/ ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள், உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2), உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 3 மற்றும் 4) ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியா 2018–2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 22 மற்றும் 23 ஆகிய இரண்டு அறிக்கைகள், பொதுக் கணக்குக் குழுவின் 172 முதல் 186 வரையிலான 15 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் 137 முதல் 154 வரையிலான 18 அறிக்கைகள், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் 10–வது அறிக்கை மற்றும் அரசு உறுதிமொழி குழுவின் 79 முதல் 85 வரையிலான 7 அறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதை பேரவையின்*